FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066950

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 12/2019 | Date: நாள் 23.10.2019

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 22.10.2019 10.30 hrs — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2019 — Time : நேரம் 1530 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.10.2019 — Time : நேரம் 1530 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 40 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வடலூர் பேரூராட்சி அலுவலகம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மோகன்தாஸ் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பக்தவச்சலம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் — (g) Address : முகவரி 16/7, சம்பாரெட்டிபாளையம், பூவாணிக்குப்பம் அஞ்சல், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) சக்கரவர்த்தி, செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், வடலூர்.
2) சிவகங்கை, கிளார்க், பேரூராட்சி அலுவலகம், வடலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 23.10.2019 ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, அலுவலகம் ஆஜரான கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, பூவாணிக்குப்பம் அஞ்சல், 16/7, சம்பாரெட்டிபாளையம் பக்தவச்சலம் என்பவரது மகன் மோகன்தாஸ் என்பவர், கணினி தட்டச்சு புகார் மனுவினை நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொடுத்துக்கொண்டார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புனர் மோகன்தாஸ், வயது 54, த/பெ பக்தவச்சலம், 16/7,சம்பாரெட்டிபாளையம், பூவாணிக்குப்பம் அஞ்சல், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம். பெறுநர் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். நான் குறிஞ்சிப்பாடி தாலுக்கா,

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

மோகன்தாஸ் 23/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 23/10/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. MALA
Rank: நிலை ....................No. எண் .........
Inspector of police
V&AC, Cuddalore.

சம்பாரெட்டிபாளையம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சம்பாரெட்டிபாளையம் கிராமத்தில் இரண்டு ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய தங்கை கவிதாவின் கணவர் மணிமாறன், கத்தார் நாட்டில் வேலை செய்து வருகிறார். கவிதாவும் கணவருடன் கத்தார் நாட்டில் தங்கி இருக்கிறார். என்னுடைய மச்சான் மணிமாறனுக்கு வடலூர், பார்வதிபுரம், ராஜலஷ்மி நகரில் வீட்டு மனைகள் உள்ளன. அம்மனைகள் அரசு அங்கீகாரம் பெறப்படாத மனைகளாக உள்ளன. அதில் உள்ள நான்கு மனைகளுக்கு அப்ரூவல் வாங்குவதற்காக 28.04.2018 ல் மச்சான் மணிமாறன் ஆன்லைன் மூலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களுக்கு விண்ணப்பம் செய்தார். பின்னர் விழுப்புரம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து 2018–அக்டோபர் மாதம் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதில் வடலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனைகளை வரன்முறை படுத்த உத்தரவு கொடுத்திருந்தார். ஆனால் இதுவரையில் வடலூர் பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து எந்தவிதமான கடிதமும் என் மச்சானுக்கு வரவில்லை. இந்நிலையில் வெளிநாட்டில் இருந்த என் மச்சான் கடந்த செப்டம்பர் மாதம் என்னிடம் வடலூர் பேரூராட்சி அலுவலகம் சென்று மனைகளை வரன்முறை படுத்தும் வேலையை பார்க்கச் சொன்னார். அதற்குண்டான செலவிற்கும் பணம் அனுப்பி இருந்தார். அதன்படி நான் கடந்த 17.09.2019 அன்று வடலூர் பேரூராட்சி அலுவலகம் சென்று, செயல் அலுவலர் திரு.சக்கரவர்த்தி அவர்களை சந்தித்து, நகர் ஊரமைப்பு, விழுப்புரம் அனுப்பிய கடிதத்தை காட்டி, மனைகளை வரன்முறை செய்து தரும்படி கேட்டேன். அவர் என்னிடம் பேரூராட்சி அலுவலகத்தில் மனைகள் அப்ரூவல் சம்மந்தமான பணிகளை செய்து வரும் கிளார்க் சிவகங்கை என்பவரை அறிமுகப்படுத்தி, சிவகங்கை சொல்லும் படி நடந்துகொள்ளுங்கள் என்று கூறினார். அதன்பிறகு சிவகங்கை என்னிடம் மனைகள் அப்ரூவல் செய்வதற்கு நான்கு மனைகளுக்கு சேர்த்து வரன்முறை கட்டணம் ரூ.25,100/–ம், வளர்ச்சி கட்டணம் ரூ.50,190/– கட்ட வேண்டும் என்று சொன்னார். அதன்படி நான் கடந்த 18.09.2019 வரன்முறை கட்டணம் ரூ.25,100/–ஐ குறிஞ்சிப்பாடி இந்தியன் வங்கியில் செலுத்தினேன். வளர்ச்சி கட்டணம் ரூ.50,190/–திற்கு 25.09.2019 அன்று DD எடுத்து சிவகங்கை, கிளார்க்கிடம் கொடுத்தேன். சிவகங்கை, சொன்னபடி பணத்தை கட்டிய பிறகும் மனைகள் அப்ரூவல் செய்யபடாமல் இருந்தால் 22.10.2019 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு மீண்டும் வடலூர் பேரூராட்சி அலுவலகம் சென்று, செயல் அலுவலர்

திரு.சக்கரவர்த்தியை பார்த்து, மனைகள் அப்ரூவல் செய்யபடாமல் இருப்பது குறித்து கேட்ட போது, அவர் என்னிடம் " நீங்க அரசுக்கு தான் பணம் கட்டி இருக்கீங்க எங்களுக்கு கட்டவில்லை, எங்களுக்கு தனியாக ரூ.25,000/– கொடுத்தால் தான் உங்க வேலை முடியும் " என்று சொல்லி என்னை கிளார்க் சிவகங்கையை சந்திக்குமாறு சொன்னார். உடன் நான் சிவகங்கை, கிளார்க்கை சந்தித்து, செயல் அலுவலர் சக்கரவர்த்தியை சந்தித்த விவரத்தை சொல்லி, செயல் அலுவலர் என்னிடம் ரூ.25,000/– கேட்ட விவரத்தையும் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் செயல் அலுவலர் கேட்ட ரூ.25,000/–த்தை கொடுங்க அப்ப தான் உங்க மனை அப்ரூவல் வேலை முடியும், எங்களுக்கு நிறைய செலவு இருக்கு என்று சொன்னார். அதற்கு நான் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருவதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து மனை அப்ரூவல் செய்து கொள்ள விருப்பம் இல்லை, மேலும் இந்த தகவலை மச்சான் மணிமாறனிடம் தெரிவித்த போது, அவரும் லஞ்சம் கொடுத்து மனை அப்ரூவல் வாங்க தேவையில்லை, லஞ்ச பணம் கேட்ட செயல் அலுவலர் சக்கரவர்த்தி மற்றும் கிளார்க் சிவகங்கை மீது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுங்க என்று மச்சான் மணிமாறன் என்னிடம் சொன்னார். மேலும் அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.25,000/–த்தை மனை வரன்முறை செலவிற்காக அவர் ஏற்கனவே கொடுத்திருந்த பணத்தில் இருந்து எடுத்து கொள்ள சொன்னார். அதன்படி நான் இன்று 23.10.2019 செயல் அலுவலர் சக்கரவர்த்தி மற்றும் கிளார்க் சிவகங்கை ஆகியோர் மீது தங்களிடம் புகார் கொடுக்கிறேன். மேலும் அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.25,000/–த்தை கொண்டு வந்துள்ளேன். (ஒப்பம் .. B.மோகன்தாஸ் 23/10/19). வாதி கொடுத்த புகார் மனுவின் உண்மை தன்மை பற்றி விசாரணை செய்து தெரிந்துகொண்டேன். உத்தரவுபடி, இன்று 23.10.2019ம் தேதி மாலை 16.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.12/2019, U/s 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

S. Mala
23/10/19
Inspector of police
V&AC, CUD.,